முதல்வர் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு!

# ‘சாம்சங்’ தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது!

## தொழிலாளர்கள் உடனடியாக பணிக்குத் திரும்புமாறு

### அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – சி.வெ.கணேசன் – டி.ஆர்.பி.ராஜா வேண்டுகோள்!

**சென்னை: அக். 9–**

**‘சாம்சங்’ நிறுவன தொழிலாளர்களுடன் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், சி.வெ.கணேசன், டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் கொண்ட குழு நடத்திய பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு ஏற்பட்டது. பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து அக்டோபர் மாதம் முதல் 2025 மார்ச் வரை ரூ.5,000 ஊக்கத்தொகை வழங்கவும் பணியின்போது உயிரிழந்தால் சம்பந்தப்பட்ட ஊழியரின் குடும்பத்துக்கு ரூ.1 லட்சம் நிதியுதவி வழங்கவும், ‘‘சாம்சங்’’ நிறுவனம் ஒத்துக் கொண்டதையடுத்து உடன்பாடு ஏற்பட்டது.**

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தில், ‘சாம்சங்’ நிறுவனத்தின் எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் உற்பத்தி ஆலை உள்ளது. அதில் பணிபுரியும், ஊழியர்களின் ஒரு பிரிவினர் தொழிற்சங்கத்திற்கு அங்கீகாரம் கேட்டும், ஊதிய உயர்வு உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளை வலியுறுத்தியும், கடந்த மாதம் முதல் தொடர் வேலைநிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபடுவோரின் சங்கத்தை அங்கீகரித்து, அதனுடன் மட்டும் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ‘சாம்சங்’ ஏற்கவில்லை. இந்நிறுவனம், தமிழகத்தில் மேலும் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

வேலைநிறுத்தப் போராட்டத்தால், ஆலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டால், ‘சாம்சங்’ தன் முதலீடுகளை வேறு மாநிலங்களுக்குத் திருப்ப வாய்ப்புள்ளது.

எனவே, ‘சாம்சங்’ ஆலைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண, சிறு, குறு, நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆகியோர் அடங்கிய குழுவை, முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அமைத்தார்.

இதைத்தொடர்ந்து, அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, ‘சாம்சங்’ நிறுவன அதிகாரிகளுடன், சென்னையில் நேற்று முன்தினம் காலை பேச்சுவார்த்தை நடத்தினார். நேற்று மாலை, பேச்சு வார்த்தைக் குழுவில் 3 அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதன் அடிப்படையில் தொழிலாளர்களின் 15 கோரிக்கைகளை “சாம்சங்” நிறுவனம் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு சமூக முடிவு ஏற்பட்டது.

தொழிலாளர்கள் மற்றும் ‘சாம்சங்’ நிறுவனம் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், சி.வெ.கணேசன், டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: –

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

1. நிறுவனம், பணியாளர் குழுவுடன் கலந்தாலோசித்து, ஊதியத்தினை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்தும்.

2. ஒரு இடைக்கால சிறப்பு ஊக்கத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- வழங்கப்படும். இது அக்டோபர் 2024 முதல் மார்ச் 2025 வரை நடைமுறையில் இருக்கும்.

3. இந்த சிறப்பு ஊக்கத் தொகை 2025-26 நிதியாண்டுக்கான வருடாந்திர ஊதிய உயர்வுடன் சேர்த்து கணக்கிடப்படும்.

4. தற்பொழுது உள்ள 5 வழித்தடங்களில் இருந்து குளிரூட்டப்பட்ட பேருந்துகளின் இயக்கம் அடுத்த ஆண்டுக்குள் 108 வழித்தடங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

5. தொழிலாளர்களின் குடும்ப நிகழ்ச்சிகள் வருடத்திற்கு 4 எண்ணிக்கையிலிருந்து 6ஆக உயர்த்தப்படும். ஒவ்வொரு நிகழ்விலும் பங்கேற்கும் குடும்பத்திற்கு சுமார் 2,000 ரூபாய் மதிப்புள்ள பரிசு வழங்கப்படும்.

6. பணியில் இருக்கும் தொழிலாளர் மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்தினரின் உடனடித் தேவைக்காக, ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்) கூடுதல் உதவித் தொகையாக வழங்கப்படும்.

7. கம்பரஸர் கட்டிடத்தில் ஒரு புதிய மருத்துவ அறை நிறுவப்படும்.

8. நிறுவனத்தின் வழங்கப்படும். கேண்டீனில் வழங்கப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மேலும், உணவுப்படி உயர்த்தி வழங்கப்படும்.

9. தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களின் ஓய்வறைகள் மேம்படுத்தப்படும். மேலும், பழுதடைந்த லாக்கர்கள் மாற்றப்படும்.

10. தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு இடையில் செல்லும் பாதைக்கு கூரை அமைத்துத் தரப்படும்.

11. தொழிலாளர்களுக்கு விடுப்புகள்உயர்த்திவழங்கப்படும்.

12. தொழிலாளரின் குழந்தை பிறப்பிற்கு ரூ.2,000/- பரிசாக வழங்கப்படும்.

13. தொழிலாளர்களின் பணிச்சூழல் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு, “MD’s People First Promise,” என்ற திட்டம் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும்.

14. தொழிலாளர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து கண்டறிய குறை தீர்ப்பு மையம் மேம்படுத்தப்படும்.

15. மேற்கண்டவை தவிர, தொழிலாளர்களின் கூடுதல் கோரிக்கைகளையும், பணிச் சூழலை மேம்பாடுகள் செய்யவும், தொழிற்சாலையில் செயல்படும் தொழிலாளர் குழுவுடன் விவாதித்து, உடனுக்குடன் தீர்வு காணப்படும்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் பேரில், “சாம்சங்” நிறுவனம் எடுத்திருக்கும் இந்த நல்ல முடிவுகளை ஏற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழிலாளர்களும் உடனடியாக பணிக்குத் திரும்புமாறு நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர்கள் தெரிவித்தனர்.

கழக அரசின் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் விருது!

# ‘மக்களைத் தேடி மருத்துவம்’ இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு - மக்களுக்குப் பயனளிப்பதை தொடர்ந்து உறுதி செய்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை,அக்.9–

“மக்களைத்தேடி மருத்துவம்” திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024–ஆம் ஆண்டிற்கான United Nation Interagency Task Force Award விருது அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டம் இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு மக்களுக்குப் பயனளிப்பதை தொடர்ந்து உறுதி செய்வோம்! என்று குறிப்பிட்டார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**இந்தியத் துணைக் கண்டத்துக்கே முன்னோடித் திட்டமாக நமது திராவிட மாடல் அரசில் செயல்படுத்தப்பட்டுள்ள “மக்களைத்தேடி மருத்துவம்” திட்டத்திற்கு உலக அங்கீகாரம் தேடி வந்திருக்கிறது!**

**ஒரு கோடியே 80 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இதுவரையில், இந்தத் திட்டத்தால் பயன் பெற்றுள்ளனர்.**

**ஒவ்வொருவரது இல்லத்துக்கும் சென்று மருத்துவச் சேவைகளை வழங்கும் நமது திட்டம், சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் அடையாளம்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024–ஆம் ஆண்டிற்கான** United Nation Interagency Task Force Award **விருது!**



**சிறப்பான முறையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி – கண்காணித்து – மேம்படுத்தி வரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறைச் செயலாளர் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்!**

**இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு மக்களுக்குப் பயனளிப்பதைத் தொடர்ந்து உறுதிசெய்வோம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னை - கதீட்ரல் சாலையில் - ரூ 46 கோடி செலவில் - பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன்

# உலகத் தரத்தில் ‘கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்!

**சென்னை, அக்.9–**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.10.2024) சென்னை, கதீட்ரல் சாலையில் தோட்டக்கலைத் துறையின் 6.09 ஏக்கர் நிலத்தில், 46 கோடி ரூபாய் செலவில் தோட்டக்கலை அருங்காட்சியகம் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள உலகத்தரத்திலான கலைஞர் நூற்றாண்டு பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு :–

தமிழ்நாட்டின் இயற்கை சூழலை பாதுகாத்திடவும், வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கிலும், 2 கோடியே 80 லட்சம் மரக்கன்றுகளை நட்டு பசுமை தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தது, பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சதுப்புநில சூழலியல் பூங்கா, சென்னை செனாய் நகரில் மெட்ரோ இரயில் கட்டுமானத்திற்குப் பின்னர் 18 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட திரு.வி.க. பூங்கா, சென்னை கிண்டியில் 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட கிண்டி சிறுவர் இயற்கை பூங்கா, திருவண்ணாமலை, ஆதி அண்ணாமலை மலையின் அடிவாரத்தில் கலைஞர் நூற்றாண்டு தோட்டக்கலை பூங்கா ஆகிய பூங்காக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன்.

கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்கா, சென்னை – புழல், ரெட்டேரி மற்றும் கொளத்தூர் ஏரிக்கரைகளில் புதிய பூங்காக்கள் அமைத்து ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள், ஏற்காடு மற்றும் மாதவரம் பூங்காக்களை தலா ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அங்கு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவைமட்டுமின்றி பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகத் துறை, சுற்றுச்சூழல் துறை, தோட்டக்கலை துறைகளின் வாயிலாகவும் புதிய பூங்காக்களை உருவாக்குதல், பழைய பூங்காக்களை புனரமைத்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

**கலைஞர் நூற்றாண்டு பூங்கா**

முதலமைச்சர் அவர்கள் 15.08.2023 அன்று சுதந்திர தின விழாவில், தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய போது ”சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா ஒன்று அமைக்கப்படும்” என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும், சமுதாயத்தில் அதன் தாக்கத்தையும் வருங்காலங்களில் தமிழ்நாட்டு மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் ‘முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா’ மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் வளர்ச்சிக்கும், இலக்கியம், கலை, காலாச்சார வளர்ச்சிக்கும், அடித்தட்டு மக்களின் எழுச்சிக்கும் ஒரு நூற்றாண்டு வாழ்ந்து தமிழர்தம் வாழ்வில் நீங்கா இடம் பிடித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப்போற்றும் விதமாக சென்னை, கோபாலபுரம், கதீட்ரல் சாலையில் செம்மொழி பூங்காவிற்கு எதிரில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, நெடு நீண்ட சட்டப் போராட்டத்திற்கு பிறகு அரசால் மீட்கப்பட்டு தோட்டக்கலை துறைக்கு மாற்றப்பட்ட சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள நிலத்தில் உலகத்தரம் வாய்ந்த பூங்காவினை அமைத்திட முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன்படி, பரந்து விரிந்த பசுமைச்சூழலில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் பல்வேறு வகையான அழகிய, அரியவகை தாவரங்கள் மற்றும் மரங்களைக் கொண்டதாக உலகத்தரத்துடன் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர், கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் உயர்தர தோட்டக்கலை அருங்காட்சியகம், ஆர்க்கிட் குடில், கண்ணாடி மாளிகை, அலங்கார வளைவு பசுமை குகை, பறவையகம், இசை நீரூற்று போன்றவற்றை வடிவமைத்தவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

**கலைஞர் நூற்றாண்டு பூங்காவின் சிறப்பம்சங்கள்**

இயற்கை எழில்மிகு சூழலுடன் கூடிய இப்பூங்காவின் நுழைவாயில் அருகில் உயர்தர தோட்டக்கலை அருங்காட்சியகம், 500 மீட்டர் நீளமுடைய ஜிப்லைன், பார்வையாளர்களை படம்பிடிக்கும் கலைஞர்களின் கலைக்கூடம், தொடர் கொடி வளைவுப்பாதை, 120 அடி நீளமுடைய பனிமூட்டப் பாதை, 2600 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள ஆர்க்கிட் குடில், அரிய வகை மற்றும் கண்கவர் பூச்செடிகளால் காட்சிப்படுத்த 16 மீட்டர் உயரமுடைய 10,000 சதுர அடிப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி மாளிகை, அயல்நாட்டு பறவைகளை கொண்ட பறவையகம்,

23 அலங்கார வளைவு பசுமை குகை, சிற்றுண்டியகம், சூரியகாந்தி கூழாங்கல் பாதை, மர வீடு, அருவி, இசை நீரூற்று, குழந்தைகள் விளையாடும் இடம், பசுமை நிழற்கூடாரம் பாரம்பரிய காய்கறித்தோட்டம் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் இப்பூங்காவில் உள்ள சுவர்களில் தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள் பூங்காவை மேலும் அழகுபடுத்துகின்றன.

இப்பூங்காவினைப் பார்வையிட நுழைவுக்கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.100/-, சிறியவர்களுக்கு ரூ.50/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர சிறப்பு அம்சங்களைப் பார்வையிட தனியே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜிப்லைனில் ஏறி சாகசப் பயணம் மேற்கொள்ள பெரியவர்களுக்கு ரூ.250/- சிறியவர்களுக்கு ரூ.200/-, குழந்தைகள் மடியில் அமர்ந்து செல்ல ரூ.150/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பறவையகத்தில் பல்வேறு வெளிநாட்டு பறவைகளை பார்வையிட மற்றும் உணவளித்து மகிழ்ந்திட பெரியவர்களுக்கு ரூ.150/- சிறியவர்களுக்கு ரூ.75/- மற்றும் மாலை நேரத்தில் இசை நீரூற்றின் கண்கவர் நடனத்தை காண பெரியவர்களுக்கு ரூ.50/- சிறியவர்களுக்கு ரூ.50/-, கண்ணாடி மாளிகையில் அரிய வகை செடிகளை பார்வையிட பெரியவர்களுக்கு ரூ.50/- சிறியவர்களுக்கு ரூ.40/- என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் பங்குபெறும் ஒரு சவாரி விளையாட்டுக்கு ரூ.50/- எனவும், புகைப்பட கருவிகளுக்கு (Camera) ரூ.100/- எனவும், ஒளிப்பதிவு கருவிகளுக்கு (Video Camera) ரூ.5000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நுழைவுக்கட்டணங்கள் மூன்று மணி நேரத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.

இப்பூங்காவிற்கான நுழைவுச் சீட்டினையும், நுழைவுகட்டணம் குறித்தான தகவல்களையும் https://tnhorticulture.in/kcpetickets என்ற இணையதளத்தின் வாயிலாக பெறலாம். மேலும், விரைவுத்தகவல் குறியீடு மூலமும் நுழைவுச் சீட்டினை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், தாயகம் கவி, அ. வெற்றியழகன், மருத்துவர் நா. எழிலன், த.வேலு, அரவிந்த் ரமேஷ், பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், வாரியத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.